1972 ஆகஸ்ட் 19]

Cases pending in Nagercoil Courts

* 192 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Civil Suits arising at Kuzhithurai in Kanyakumari district pending at Nagercoil Courts as on 1st March 1972?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1—3—1972 அன்றுள்ளபடி, குழித்துறையிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட 131 மேல்முறையீட்டு வழக்குகளும், 11 பல்வகை சிவில் மேல்முறையீட்டு வழக்குகளும் நாகர்கோவிலில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட நீதிமன்றத்தில் முடிவுறு நிலையில் இருந்தன. அதே போல, 1—3—1972 அன்றுள்ளவாறு, குழித்துறையிலிருந்து பதிவு செய்யப்பட்ட 265 மேல்முறையீட்டு வழக்குகளும், 13 பல்வகை சிவில் மேல்முறையீடுகளும் நாகர்கோவில் துணை நீதிமன்றத்தில் முடிவுறு நிலையில் இருந்தன.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு கோரிக்கை தாலுகாவிலிருந்து நாகர்கோவிலில் இருக்கும் நீதிமன்றத்திற்கு வரும் வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, குழித்துறையில் அவசியம் சப் கோர்ட் தேவைப்படுகிறது. ஆகவே குழித்துறையில் சப் கோர்ட் நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு கோரிக்கை இருக்கிறது. உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தால் அரசாங்கம் பரிசீலிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, குழித்துறையிலேயிருக்கிற முன்சீப் கோர்ட்டிலே அதிகமான கேஸ்கள் இருக்கிற காரணத்தினால், அங்கு அடிஷனல் முன்சீப் கோர்ட் வேண்டுமென்று மனுச் செய்தார்களே, அதன்மீது அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்ததா ? அண்மையிலே அமைச்சரவர்கள் குழித்துறைக்கு விஜயம் செய்தார்கள். அப்பொழுது இது சம்பந்தமாக ஏதாவது பேசப்பட்டதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்சீப் கோர்ட் பற்றிய விவரம் இல்லை. நான் அங்கு சென்றபோது சப் கோர்ட் தான் வேண்டுமென்று கேட்டார்கள். அதை உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்தால், அரசாங்கம் பரிசீலிக்கும்.

[1972 ஆகஸ்ட் 19

திரு. ஜே. ஜேம்ஸ் : சென்னை உயர்நீதி மன்றத்தில் தலைமை நீதிபதி இல்லாத காரணத்தால், அதிக வழக்குகள் முடிவுருமல் இருக்கின்றனவா ? தற்காலிகமாக தலைமை நீதிபதி ஒருவரை நியமிக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, குழித்துறையைப் பற்றியது.

பாய் நெசவுத் தொழில்

*193 **வினு—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈச்சம்பாய், கோரைப் பாய், நெசவுத் தொழில் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த இடங்களில் மிகுதியாக நடைபெற்று வருகின்றன?

(இ) இத்தொழில்களை ஊக்குவிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் சிறுகாகுழி தாலுகாவில் கொள்ளிடக்கரை ஓரத்தில் ஏராளமான கோரைகள் மண்டிக் கிடக்கின்றன. அங்கு கோரைப்பாய் நெய்வது முக்கியமான தொழிலாகக் கருதப்படுகிறது. அதை ஊக்குவிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டத்திலே விளாந்திர சமுத்திரம், விளாங்குடி இரண்டு இடத்திலேதான் இது செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர், அவர் கூறியது பற்றி எழுதி அனுப்பிஞல் அரசு கவனிக்கும்.

திரு. கே எ. வகாப் : தலைவர் அவர்களே, விடையிலே சுமார் 32 இடங்களில் பாய் சங்கங்கள் இயங்கி வருவதாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் வந்தவாசி கூட்டுறவு என்பது பல சங்கங்களை உள்ளடக்கிய பாய்சங்கம் என்பதை அரசு அறியுமா ? அது

@ 382–384-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.